From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.NO.155/2018

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : கலைசெல்வி | Father/Husband Name | : ஜெயக்குமார் |
| Age | : | Calling | : |
| Date | : 10.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 10 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது மதுரை மாவட்டம் பெண்களுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அயல் அலுவலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மதுரை மாவட்ட காவல் துறை தகவல் தொடர்பு அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2016 ம் தேதி 15.00 மணியளவில் அனைத்து மகளிர் காவல் நிலைய மேலூர் பொறுப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 61/2016 பிரிவுகள் 498(A)ன்கீழ் இதச ஆக வழக்கு பதிவு செய்தேன்.

**( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், அன்றைய தினம் மனுதாரர் செந்தாமரை, போஸ், அம்சவள்ளி, ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்நிலையில்

பணிமாறுதலில் சென்றுவிட்டதால் காவல் ஆய்வாளர் திருமதி.விஜயலெட்சுமி என்பவர் பார்வைக்க வைத்தேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

புகார்தாரர் செந்தாமரை என்னிடம், அல்லது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டு அங்கிருந்து வந்த தபால் மூலம் வழக்கு பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்வதற்கு முன்னர் ஆரம்ப கட்ட விசாரயை செய்தேனா என்றால் இல்லை, மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் உத்தரவின் அடிப்படையில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அசாஆ1 ஆன புகார் மனுவில் அவ்வாறு உடனடியாக வழக்கு பதிவு செய்ய சொல்லி எந்த ஒரு மேற்குறிப்பு இல்லை என்றால் சரிதான், எங்கள் மேல் அதிகாரிகள் அவ்வாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிமிருந்து வரும் புகாரிற்கு உடனடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்று வாய் மொழி உத்தரவு உள்ளது. அந்த புகார் 01.08.2016 ம் தேதி கொடுக்கப்பட்டு 06.08.2016 ம் தேதி 6 நாட்கள் தாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டு எங்களிடம் தாமதமாகவே வந்தது. அசா1 ற்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் ஆன தேதியிலிருந்து இந்த புகார் கொடுக்கப்பட்டு காலத்திற்கு இடையே ஆன 7 ஆண்டுகாளத்தில் 1 ம் எதிரி புகார்தாரர் கொடுமை செய்ததாக வேறு ஏதும் புகார் கொடுக்கப்பட்டுள்ளதாக எனது விசாரணையில் நான் தெரிந்துகொண்டேனா என்றால் எனது விசாரணையில் சாட்சிகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

2) புகார் மனுவில் எதிரிகள் எத்தனை பவுன் நகைகள் கேட்டார்கள்

என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் புகாரில் எனது கணவர் தான் வேன் ஒன்று வாங்கி ஒட்டப்போறேன், அதற்கு அசா1ன் அப்பா வீட்டில் பணம் வாங்கி வா, பற்றாததற்கு அசா1ன் நகைகளை கேட்டு கொடுமைப்படுத்தி வந்ததாகவும், எனது சீர்வரிசை பொருட்கள் மற்றும் எனது நகைகள் அனைத்தையும் வாங்கி வைத்துக்கொண்டு தர மறுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் அசா1 என்ன, என்ன நகைகளை அணிந்து வந்தார்கள் என்று வகைப்படுத்தி உள்ளார்களா என்றால் வகைப்படுத்தி சொல்லவில்லை, ஆனால் சுமார் 12 பவுன் தங்க நகை, கணவருக்கு 3 பவுன் தங்க நகை என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேற்கூறிய நகைகளை போட்டதற்கு ஆதரவாக ஆவணங்கள் அல்லது புகைப்படங்கள் உள்ளதா என்றால் இல்லை. புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சீர் வரிசை பொருட்களுக்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் என்னுடைய விசாரணையில் இல்லை, எனக்கு பின்னர் வழக்கை விசாரித்த புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்திருக்கலாம். அதேபோல் நான் விசாரித்த மற்ற இரண்டு சாட்சிகளும் அசா1ன் அப்பா மற்றும் அம்மா என்றால் சரிதான். அதேபோல் அசா1 தனது நகைகளை அடகு வைத்து 1ம் எதிரியை வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்தாக குறிப்பிட்டுள்ளார், அவ்வாறு இருக்க எவ்வளவு நகைகளை அடகு வைத்து, யார் மூலம், எவ்வளவு பணம் செலுத்தி அனுப்பிவைத்தாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் அசா1 புகாரில் மற்றும் எனது விசாரணையில் யார் முன்னிலையில் வைத்து, எந்த தேதி, எந்த நேரத்தில் அடித்து விரட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நகைகளை 1ம் எதிரி எந்த தேதியில், எந்த கடையில் அடகு வைத்தார் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அசா2 மற்றும் அசா3 ஆன அசா1

தாய் மற்றும் தந்தை இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார்கள், ஆனால் அசா2 மற்றும் அசா3 இருவரும் 10, 15 கிமீ தொலைவில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான், அசா1 புகார் மனு கொடுத்தபோது அவரது தாயார் வீட்டில் குடியிரு'ந்து வந்தார். அசா1 எவ்வளவு காலம் அவரது தாயார் வீட்டில் இருந்தார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. புகார் கொடுப்பதற்கு முன்பாக அசா1 அவர்களது தாயார் வீட்டில் இருந்து வந்தார் என்றால் புகார் கொடுப்பதற்கு முன்பாக அவர் எங்கிருந்தார் என்று எனக்கு தெரியாது.

3) எதிரிகள் அசா1யை கொடுமைப்படுத்தி, கூடுதல் வரதட்சனை கேட்டபோது வேறு சாட்சிகள் இருந்ததாக புகாரிலோ, விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் எதிரியின் வீட்டிற்குள் மேற்கூறிய சம்பவம் நடந்ததால் மற்ற சாட்சிகள் யாரும் இல்லை. அசா2 மற்றும் அசா3 எனது விசாணையில் எதிரிகள் என்ன, என்ன நகை கேட்டு கொடுமைப்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொல்லியுள்ளார்கள்.

4) நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன், மேற்படி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.